00084

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞானங்கள் பீடம்

சட்டக்கற்கைகள் திணைக்களம்

சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - 2023/2024

மட்டம் - 04

**LLU4707/LWU2313– குடும்பச் சட்டம்**

இறுதிப் பரீட்சை

காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : 15.05.2025 நேரம்: பி.ப 01.30 - பி.ப 04.30

மொத்த வினாக்களின் எண்ணிக்கை - 08
ஐந்து (05) வினாக்களிற்கு மாத்திரம் விடையளிக்குக.
தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

உம்மால் தெரிவு செய்யப்பட்ட வினாக்களுக்கான விடைகளை நியதிச்சட்ட உறுப்புரைகள் மற்றும் தீர்ப்புச்சட்டங்கள் என்பனவற்றால் ஆதாரப்படுத்தி ஆராய வேண்டியது கண்டிப்பானது.

1. "இலங்கையின் சட்டத்தின் கீழ் தமது திருமணத்தை பதிவு செய்வதன் மூலம் அல்லது வழக்காற்று திருமணம் ஒன்றின் பொருத்தமான சம்பிரதாயங்களை நிறைவேற்றுவதன் மூலம் திறத்தவர்கள் ஒரு வலிதான திருமணத்தை மேற்கொள்ளலாம்."

   இவ்விரு வகையான திருமணங்களையும் அவை ஒவ்வொன்றினதும் தேவைப்பாடுகளைக் குறித்து நோக்கி விளக்குக.

   (20 புள்ளிகள்)

2. இலங்கையில் பிள்ளைகளின் கட்டுக்காவல் தொடர்பான சட்டக்கோட்பாடுகளை கட்டுக்காவல் பிணக்குகளில் "பிள்ளை மீதான சிறந்த அக்கறைகள்" எனும் தராதரம் எவ்வாறு பிரயோகிக்கப்படுகிறது என்பது குறித்து சிறப்பு கவனம் செலுத்தி நுணுக்கமாக ஆராய்க. உமது விடை உரோம டச்சுச்சட்ட கோட்பாடுகள் மற்றும் பொருத்தமான தீர்ப்புச்சட்டங்கள் என்பவற்றை உள்ளடக்க வேண்டும்.

   (20 புள்ளிகள்)

3. அசங்க என்பவனும் விகங்கி என்பவளும் 2015ஆம் ஆண்டில் திருமணம் செய்தனர். திருமணத்தின் பின்னர் அவர்கள் கொழும்பில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பு ஒன்றில் குடியேறினர். ஆரம்பத்தில் அவர்களது திருமணம் அமைதியாக இருந்த போதும் ஒரு வருட காலத்திற்குள் விகங்கி அசங்கவின் நடவடிக்கையில் பெரு மாற்றத்தை கவனித்தாள். பெரும்பாலும் இரவு நேரங்களில் தாமதமாக எந்தவித விளக்கமும் கொடுக்காமல் அசங்க வீடு திரும்பினான். சூதாட்டத்திற்காக அதிக பணத்தை செலவளிக்கவும் ஆரம்பித்தான். இது குறித்து விகங்கி விசாரித்த போது அவளை அசங்க வாக்குவாதப்பட்டதுடன் தன்னை நம்பாது சந்தேகப்படுவதாக குற்றம் சாட்டினான். பல சந்தர்ப்பங்களில் அசங்க சண்டையின் போது விகங்கியை உடல் ரீதியாக தாக்கியுள்ளான்.

அசங்க அவனுடன் பணியாற்றும் டஸினி என்பவளுடன் உறவு ஒன்றை கொண்டிருப்பதாக அநாமதேய செய்திகளும் புகைப்படங்களும் விகங்கிக்கு கிடைக்கப்பெற்ற போது நிலைமை மேலும் மோசமடைந்தது. விகங்கி சான்றுகளுடன் அசங்கவிடம் இது குறித்து வினவிய போது தனது உறவை ஏற்றுக்கொண்ட அசங்க அதனை முடிவுறுத்த மறுத்ததுடன் தான் விகங்கியை தொடர்ந்தும் விரும்பவில்லை என்று கூறி அவள் இதற்கு தன்னை "பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும் அல்லது நீங்க வேண்டும்" என்று கூறினான்.

இவற்றுக்கு மத்தியில் விகங்கி அசங்கவுடன் இணைவதற்கு முயற்சித்ததுடன் உளநல ஆலோசனையும் பெற வேண்டினாள். ஆனால் அசங்க இவை குறித்து எந்த அக்கறையும் காட்டவில்லை. 2023இல் குறித்த கடுமையான வாக்குவாத்தின் பின்னர் அசங்க விகங்கியை தன் குடும்ப உறுப்பினர்கள் முன்னிலையில் தாக்கினான். விகங்கி தனது திருமண இல்ல்த்தை நீங்கி பெற்றோரின் இல்லத்திற்கு சென்றாள். விகங்கியை தொடர்பு கொள்ளவும் அவளுடன் சுமூகமான உறவு ஏற்படுத்தவும் அசங்க இன்றுவரை எந்த முயற்சியையும் எடுக்கவில்லை

i. விகங்கிக்கு கிடைக்கத்தகு சட்ட நிவாரணங்கள் குறித்து அவளிற்கு அறிவுறுத்துக.

(15 புள்ளிகள்)

ii. இத்தம்பதியினர் முஸ்லீம் சட்டத்தால் ஆளப்பட்டிருப்பின் உமது விடை வேறுபடுமா? உமது விடைக்கான காரணத்தை விளக்குக.

(05 புள்ளிகள்)

4. நயினஜித் என்பவனும் யுவனி என்பவளும் பொதுச்சட்டத்தின் கீழ் 2021இல் திருமணம் செய்தனர். அவளுடன் வெவ்வேறு மாவட்டங்களில் பணியாற்றியதுடன் திருமணத்தின் பின்னர் நயினஜித் தொடர்ந்தும் மாத்தறையில் தொடர்ந்து பணியாற்றி வசித்ததுடன் யுவனி அநுராதபுரவில் அரசாங்க காரியாலயத்தில் பணியாற்றியதுடன் அங்கே வசித்தாள். இவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் அதிகம் சந்தித்துக் கொண்ட போதும் தொழில் ரீதியான காரணங்களுக்காக பெரும்பாலும் வெவ்வேறாகவே வசித்தனர்.

2024இன் ஆரம்பத்தில் கர்ப்பமுற்ற யுவனி ஒரு பெண்பிள்ளையை பெற்றெடுத்தாள். எவ்வாறாயினும் அப்பிள்ளையை தன்னுடையதாக ஏற்றுக் கொள்ள நயினஜித் மறுத்தான். அவர்கள் இருவரும் வெவ்வேறாக வசித்த போது யுவனி தன்னுடைய சக அலுவலக பணியாளருடன் கொண்டிருந்த நெருக்கமான உறவின் காரணமாக பிறந்த பிள்ளை அது எனக் கூறுகிறான்.

நயினஜித்தின் வருகைகளின் போது உருவானதே இக்குழந்தை என யுவனி கூறுவதுடன் எவ்விதமான தவறான உறவையும் மறுக்கிறாள். அவள் குழந்தை நெறிமுறையானது என்றும் குழந்தையின் தந்தை நயினஜித் என்றும் நிரூபிக்க விரும்புகிறாள்.

மேலுள்ள சந்தர்ப்பத்திற்கு மகவு முறை குறித்த சட்ட ஊகத்தின் பிரயோகம் குறித்து திறத்தவர்களுக்கு இவ் ஊகத்தின் அண்மைய அபிவிருத்திகளின் தாக்கங்களையும் அறிவுறுத்துக.

(20 புள்ளிகள்)

5. உதேஸ் மற்றும் அனுசி ஆகியோர் 2003இல் திருமணம் செய்ததுடன் அவர்களுக்கு இரு பிள்ளைகள் இருக்கின்றனர். 2024இல் தொடர்ச்சியான குடும்ப பிணக்குகள் காரணமாக அனுசி திருமண இல்லத்தை விட்டு பிள்ளைகளுடன் நீங்கியதுடன் தனது பெற்றோருடன் வாழ்ந்தாள். தற்போது அவள் தொழிலற்று பொருளாதார ரீதியாக தன்னுடைய வயதான தந்தையாரின் மீது தங்கியிருக்கிறாள். ஒரு பொறியியலாளராக பணியாற்றும் உதேஸ் அனுசி நியாயமான காரணமின்றி நீங்கிச் சென்றதாலும் அதனால் எவ்வித பராமரிப்பிற்கும் உரித்துடையவள் அல்ல என்றும் எவ்வித பொருளாதார உதவியையும் வழங்குவதற்கு மறுக்கிறான்.

அனுசி தனக்கும் முறையே 14 மற்றும் 20 வயதுகளில் உள்ள தன்னுடைய இரு பிள்ளைகளுக்கும் உதேஸிடமிருந்து பராமரிப்பை பெற விரும்புகிறாள்.

நீர் உம்மை அனுசியின் சட்ட ஆலோசகர் எனக் கருதிக்கொண்டு 37ஆம் இலக்க 1999ஆம் ஆண்டின் பராமரிப்புச்சட்டம் மற்றும் உரோம டச்சுச் சட்டம் என்பனவற்றின் கீழ் அனுசிக்கும் அவளது பிள்ளைகளுக்கும் கிடைக்கத்தகு சட்ட நிவாரணங்கள் குறித்து விளக்குக.

(05 புள்ளிகள்)

6. பின்வரும் சந்தர்ப்பங்களில் சட்ட வலிதான தன்மையை சுருக்கமாக விளக்குக.

i. சிறிதாச என்பவன் மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவர் என்பதுடன் ஒரு செல்வந்த வர்த்தகரும் ஆவார். அவர் முடக்குவாதம் ஒன்றால் பாதிக்கப்பட்ட பின்னர் தன்னை கவனித்துக்கொண்ட தனிப்பட்ட உதவியாளரான ஜனனி என்பவளுக்கு தன்னுடைய சகல உடைமைகளையும் அளித்து ஒரு இறுதி விருப்பாவத்தை அவர் எழுதுகிறார்.

ii. ஜயநாதன் மற்றும் மீனாட்சி ஆகியோர் 2000ஆம் ஆண்டில் திருமணம் முடித்த தேசவழமையால் ஆளப்படும் இரு பிள்ளைகளைக் கொண்டுள்ள ஒரு தம்பதியினர் ஆவர். 2024இல் எவ்வித மரணசாசனமும் இன்றி ஜயநாதன் இறப்பதுடன் 2022இல் தானும் ஜயநாதனும் இணைந்து வாங்கியிருந்த காணி ஒன்றை மீனாட்சி தன்னுடைய சகோதரர் சிவநேசிற்கு கையளிக்கிறார்.

iii. நெலும் மற்றும் பண்டார ஆகியோர் ஒரு தீக முறையில் திருமணம் செய்த ஒரு கண்டியத் தம்பதியினர் ஆவர். இவர்கள் 2013இல் நெலுமின் பெற்றோர்களின் இல்லத்திற்கு குடியேற முதல் பண்டாரவின் குடும்பத்தாருடன் வசித்திருந்தனர். நெலுமின் தந்தை 2024இல் மரணசாசனம் இன்றி இறப்பதுடன் அவரது மூதாதையரின் உடைமையை அவள் கோருகிறாள்.

iv. அப்ரத் மற்றும் பகிமி ஆகியோர் பிள்ளைகளற்ற ஒரு முஸ்லீம் தம்பதியினர் என்பதுடன் இவர்கள் ஹம்சத் எனும் பெயர் கொண்ட முஸ்லீம் பிள்ளையை மகவேற்பு செய்தனர். ஒரு விமான விபத்தில் இவர்கள் மரணசாசனம் இன்றி இறந்ததுடன் இவர்களது உடைமைகளை ஹம்சத் கோருகிறான்.

(5x4= 20 புள்ளிகள்)

7. அனித்தா என்பவள் தெற்காசிய நாடுகளின் மகவேற்புச்சட்டங்கள் குறித்து ஆராய்வை மேற்கொள்ளும் ஒரு மேற்படிப்பு படிக்கும் அமெரிக்க மாணவி ஆவாள். அவள் இலங்கை பிள்ளை ஒன்றை மகவேற்க விரும்பும் இலங்கைப் பிரசைகளுக்கும் வெளிநாட்டுத் தம்பதியினருக்கும் (பிரசைகள் அல்லாதவர்கள்) பிரயோகிக்கப்படும் வேறுபட்ட தேவைப்பாடுகள் மீது சிறப்புக் கவனம் செலுத்தி இலங்கையில் உள்ள மகவேற்புத் தொடர்பான சட்ட உறுப்புரைகள் குறித்து சரியான விரிவான தகவலைப் பெற உம்மை தொடர்பு கொண்டுள்ளதாக கருதுக.

அனித்தாவிற்கு ஒரு குறிப்பை எழுதுக.

(20 புள்ளிகள்)

8. பின்வருவன மீது குறிப்புகள் எழுதுக.

அ) *Natalie Abeysundrere v. Christopher Abeysundere (1998) 1 Sri LR 185* (07 புள்ளிகள்)

ஆ) *Ambalavanar v. Navaratnam (1955) 56 NLR 422* (07 புள்ளிகள்)

இ) கோள்வழி திருமணம் (Putative marriage) (06 புள்ளிகள்)

- முழுப்பதிப்புரிமை பெற்றது -